செ.வெ.எண்:35 நாள்:21.03.2017

நாகப்பட்டினம் மாவட்டம்

**மாவட்டக் கருவூலம் மற்றும் அனைத்து சார்நிலைக் கருவூலங்களிலும் ஓய்வூதியம் பெறும் அனைத்து ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கும் 2017-2018ம் ஆண்டிற்கான வருடாந்திர நேர்க்காணல் 01.04.2017 முதல் 30.06.2017 வரை நடைபெறுகிறது - மாவட்ட ஆட்சித்தலைவர் திரரு.சு.பழனிசாமி,இ.ஆ.ப அவர்கள் தகவல்**

நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள மாவட்டக் கருவூலம் மற்றும் மாவட்டத்திலுள்ள அனைத்து சார்நிலைக் கருவூலங்களிலும் ஓய்வூதியம் பெறும் அனைத்து ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கும் 2017-2018ம் ஆண்டிற்கான வருடாந்திர நேர்க்காணல் 01.04.2017 முதல் 30.06.2017 வரை நடைபெறும். இந்த நேர்க்காணலில் அனைத்து ஓய்வூதியதாரர்களும் தவறாமல் ஆஜராகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. நேர்க்காணலில் ஆஜராகாதவர்களுக்கு ஆகஸ்ட்-2017 முதல் ஓய்வூதியம் நிறுத்தப்படும்.

ஓய்வூதியதாரர்கள் மத்திய அரசின் ஜீவன் பிரம்மான் மூலம் மின்னணு வாழ்வு சான்றிதழினை (Digital Life Certificate) 01.04.2017க்கு பிறகு பெற்றளிப்பதன் மூலமும் நேர்க்காணல் பதிவு செய்யலாம்.

ஓய்வூதியதர்கள் ஜீவன் பிரம்மான் மூலம் மின்னணு வாழ்வு சான்றினை தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் அனைத்து வட்ட அலுவலகங்களில் இயங்கி வரும் இ-சேவை மையம் மற்றும் பொது சேவை மையத்தில் தங்களது ஆதார் எண், ஓய்வூதியம் தொடர்பான விபரங்கள் அளித்து கைவிரல் ரேகை பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். இதற்காக ரூ.10/- கட்டணம் வசூலிக்கப்படும். 01.04.2017க்குப் பிறகு இச்சான்று பெற்றளிப்பதன் மூலம் நோக்காணலுக்கு நேரில் வருவதிலிருந்து விலக்கு பெறலாம். ஓய்வூதியதாரர்கள் இந்த வசதியினை பயன்படுத்திக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறாா்கள்.

செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
நாகப்பட்டினம்.